நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 849/2025

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அஜீத்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள் |
| கிராமம் | : | கூலிலைன் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 25 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 20–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.55 PM

1. நான் தற்போது கூலிலைனில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 2025 ம் வருடம் பிப்ரவரி மாதம் மாலை சுமார் 6.00 மணிக்கு எனது வியாபாரத்தை முடித்துவிட்டு பேருந்தில் இருந்து இறங்கி மேட்டுர் பேருந்து நிலையத்தில் அரசமரத்திற்கு அருகில் உள்ள டீக்கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன்.

2. அப்போது எங்களது வீட்டின் அருகில் குடியிருக்கும் ராஜகோபால் என்பவர் அந்தியூர் செல்லும் பேருந்திற்கு வலதுப்புற ஓரமாக அதாவது ஓட்டுநர் இருக்கை இருக்கும் பக்கத்திற்கு எதிர்பக்கத்தில் நின்றுக்கொண்டிருப்பதை பார்த்தேன். அதன்பின்னிட்டு சிறிது நேரம் கழித்து சத்தம்கேட்டு அருகில் சென்று பார்த்தபோது ராஜகோபால் இரத்த வெள்ளத்தில் கால்கள் உடைந்து மயங்கிய நிலையில் அரசு பேருந்தின் சக்கரம் அருகில் இருந்தார். அது எந்த ஊர் செல்லும் பேருந்து என்று எனக்கு தெரியாது. பேருந்து அங்குதான் நின்றுக்கொண்டிருந்தது.

3. ஒரு ஆம்புலன்ஸ் வந்து அடிப்பட்டவரை சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். நான் உடன் செல்லவில்லை. மேற்படி அரசு பேருந்தின் ஓட்டுநரை நான் பார்த்ததாக நியாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று நான் நேரில் பார்க்கவில்லை. சத்தம்கேட்டுதான் பார்த்தேன். நான் சென்று பார்க்கும்போது பேருந்தின் வலதுப்புற பின்சக்கரத்தின் அருகில்தான் ராஜகோபால் அடிப்பட்டு கிடந்தார். காலில் அவருக்கு அடிப்பட்டிருந்தது. வேறு எங்கும் அவருக்கு அடிப்படவில்லை.

2. விபத்தில் இறந்துபோன ராஜகோபால் என்பவரின் மகன் வினோத் என்னுடைய நண்பர் ஆவார். என் நண்பர் வினோத் கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 04.10 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**